சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "பாஸ் இன் தலைவன்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

அரசாணை (டி) எண். 212 17642 நாள். 02.06.2014
ஜய, வைகாசி 19,
திருவள்ளுவர் ஆண்டு, 2045

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/9479/2014, நாள் 08.04.2014 தேர்வுக்குழு எண். 6/2014–2015.
4. சென்னை உயர்நீதிமன்ற நீதிபேராணை மனு எண்கள் 31064, 30808, 29757 மற்றும் 29891/2013 நாள் 16.04.2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "பாஸ் இன் தலைவன்" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களும் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என்று பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. "பாஸ் இன் தலைவன்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | C.பழனி, இணை ஆணையர் (வணிகவரி) , சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை –6. | இத்திரைப்படம் 'U' தணிக்கை சான்றிதழ் பெற்றுள்ளது என்றாலும், திரைப்படத்தின் தலைப்பு ஆங்கில மொழி கலந்து பெயராக கொண்டுள்ளது என்பதாலும், அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் |

| | | |
|---|---|---|
| | | துறை நாள் 21.7.2011–ன்படி தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால், இத்திரைப்படத்தின் பெயர் தமிழில் மட்டும் இல்லாமல் பிற மொழி சொல்களுடன் பெயரிடப்பட்டுள்ளதால், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு பெற தகுதி பெறவில்லை என்றும், "பாஸ் இன் தலைவன்" என்ற திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு தர தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | ந.அருள்<br>இயக்குநர் (மொழிபெயர்ப்பு)<br>தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை | திரைப்படத்தின் தலைப்பு தமிழ் அல்லாது ஆங்கில கலப்போடு திகழ்வது ஏற்க தக்கது அல்ல என்றும், இத்திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றிருந்தாலும், பல ஆங்கில சொற்கள் நிரம்பி வழிவதை தவிர்க்க வேண்டும் என்றும், தமிழ் பண்பாட்டிற்கு ஏற்க தகாத வகையில் தந்தையாரை மகன் தரம் தாழ்த்தி பேசுவது நெருடலாக உள்ளது என்றும், வன்முறை மற்றும் ஆபாசம் இருப்பதாலும், திரைப்படத் தலைப்பு ஆங்கிலத்தில் உள்ளதாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்குக்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | பாபு என்கின்ற N.V.அனந்த கிருஷ்ணன், ஒளிப்பதிவாளர் | 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்றாலும், திரைப்படத்தில் ஆபாசம் இல்லை என்றாலும், திரைப்படத்தில் வன்முறை அதிகமாக உள்ளது என்பதாலும், மேலும், முக்கியமான நிபந்தனையான தமிழில் தலைப்பு இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்படாததாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | ராம்ஜி,<br>பத்திரிகையாளர் | "பாஸ் இன் தலைவன்" 'இன்' என்ற ஆங்கில வார்த்தையோடு திரைப்படத் தலைப்பு உள்ளது என்பதாலும், திரைப்படத்தின் ஆரம்ப காட்சி வன்முறையாக உள்ளது என்பதாலும், நகைச் சுவை என்ற பெயரில் தந்தையை 'வாத்து வாயா' மாமனாரை 'சமாதி மண்டையா' என்று கிண்டலடிப்பது அநாகரீகம் மற்றும் கலாச்சாரத்திற்கு விரோதமானது என்பாதலும், நடமாடும் வேனில் அரசியல் |

| | | |
|---|---|---|
| | | தலைவரின் 'வித்தியாசமான.......' எதையோ பார்த்ததாக உள்ள நகைச்சுவை, முகம் சுளிக்க வைப்பதாக உள்ளது என்பதாலும், இடைவேளை வரை கதாபாத்திரங்கள் பேசும் வசனத்தில் ஆங்கில வார்த்தைகள் அதிகம் உள்ளது என்பதாலும், நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் இருக்கும் நிலையில் குறிப்பாக தலைப்பு தமிழ் இல்லாத நிலையில் வரி விலக்கு சிபாரிசிக்கு தகுதியானது அல்ல என்று பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | L.R. ஈஸ்வரி,<br>பின்னணிப் பாடகி | 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்றாலும், திரைப்படத்தில் தலைப்பு தமிழில் இல்லை என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை, அதிகமாக இருக்கிறது என்பதாலும், தமிழ் பண்பாட்டிற்கும், அரசாணையின் நிபந்தனைக்கும் ஏற்ற படம் இல்லை என்பதாலும், இத்திரைப்படம் வரி விலக்குக்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், ''பாஸ் இன் தலைவன்'' தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதால், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் ''பாஸ் இன் தலைவன்'' தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/6/2014
பிரிவு அலுவலர்.
2/6/14